# 60. கோச்செங்கட் சோழநாயனார்

அரசகுலம் - சோழநாடு - சிதம்பரம் - மாசி - சதயம்

இவர் பிறக்கும் போது சோதிடர்கள் ஒரு நாழிகை கழிந்து பிறந்தால் மூவுலகையும் ஆள்வானென்று கூறியதால், இவனது தாயார், தலைகீழாக ஒரு மணிநேரம் இருந்தபின் இவனைப் பெற்றாள். குழந்தை காலந்தாழ்ந்துப் பிறந்ததால் கண்கள் சிவந்திருக்க அதனைக் கண்ட தாய் (இவளது), என் கோசெங்கண்ணனா என்று கதறி இறந்துவிட்டாள். இவனுக்கு கோச்செங்கண்ணன் என்ற பெயர் வைத்து, தந்தை வளர்த்து, பட்டம் கட்டினார். முற்பிறவியில் ஓர் சிலந்தியாயிருந்து திருவானைக்காலிங்கத்தின் மீது வெய்யில் படாதிருக்க கூடு கட்டிற்றாம். அதனை வழிபடும் ஓர் யானை சிலந்தி வலையைக் கலைத்து சுத்தம் செய்து பின்தான் வழிபடுமாம். இதே மாதிரி பல தடவையான பிறகு சிலந்தி யானையின் துதிக்கையில் நுழைந்து அதனைக் கடித்தது வலிதாங்காது துதிக்கையை ஓங்கி அடித்து யானையும் இறந்தது. சிலந்தியும் இறந்தது. சிவபெருமான் யானைக்கு நற்பதம் அளித்து சிலந்தியை, சோழமன்னாக அவதரிக்கச் செய்தார். இவரே கோச் செங்கண்ணன் இவர் பல கோயில்களைக் கட்டியுள்ளார். பின்னர் சிவபதமும் பெற்றார்.

**ராகம் : பைரவி (20)** **ஆ : ஸரிகமபதநிஸ்**

**தாளம் : ஆதி** **அவ : ஸ்நிதபமகரிஸ**

**பல்லவி**

வெள்ளை யானை துதிக்கும் ஆனைக்காலிங்கத்தில்
வெய்யில் படாதிருக்க சிலந்திவலை பின்னிற்றே

**அனுபல்லவி**

தன்னியே வலை கலைத்த யானையை கடித்து
சிலந்தியும் யானையுடன் இறந்திட்டதே

**சரணம்**

காலந்தாழப் பிறந்ததால் மூவுலகம் ஆள்வானென்று
தலை கீழாய் நின்று பெற்ற பிள்ளை கோச்செங்கண்
காலமும் பல கோயில் கட்டியுந்தன் அடி சேர்ந்தார்
கடந்த பிறவியில் உன் அருள் பெற்ற சிலந்தியாம்.

**பல்லவி**

தநீ ஸ்ா , ஸ்ா ஸ் நி ரி. ஸ் நித பா ம ப த நிஸ் நிதப மகபம கா ரீ
வெள்ளை யா னை து . தி . . க் கும் ஆ. னை . . க் கா . லிங் . .
கத் தில்

ஸ ரிகரிஸா ஸா ரீ , ரி கா ரீ ; ரி கா ம மா பத பத ம ப பா
வெய். . யில் ப டா திருக் க சிலந் தி வ லை . பின் . னிற்றே

**அனுபல்லவி**

ஸ்ா , நி தா பா பா , த பா மா பா , ப த நீத தா நீ ஸ்ா ;
தள் ளி யே வ லை க லைத் த யா னை யை க டித் து

தா நீ , ஸ் ஸ்ா ஸ் நி ரி. ஸ் நி த பா மபதநிஸ்நிதப மக பம கா ரீ
சிலந் தியும் யா . னை . யு . டன் இ . றந் . . தி ட் ட . . . .தே

**சரணம்**

| | | |
|---|---|---|
| ரீ , க மா மா ரீக ம க ரி ஸா | ரீ , க மா மா | பா தா பா பா |
| காலந் தாழப் பறந்த . தால் | மூ வு ல கம் | ஆள் வா னென்று |
| ப மா , நித நீ ஸ்ா , நி நித பா | மா , ப மாகரி | ரிகா , மா மா |
| தலை கீ . ழாய் தா ன் நின் று | பெற்ற பிள் ளை | கோ செங் கண் |
| பா , த பா ; பா தா நீ ஸ்ா | தா , நி ஸ்ா ஸ்ா | ஸ்ஸ்ா நி நித பா |
| கா ல மும் ப ல கோ யில் | கட் டி யுந் தன் | அடி . . . சேர்ந் தார் |
| நிக்ா ரி. ஸ்ாஸ்ா ஸ்நி ரி.ஸ் நித பா | தாநீ , த பா | பாதம பா தா |
| கட ந்த பி ற வி . யில் . . . உன் | அருள் பெற்ற உன் | சிலந் தியாம் |